புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# களவுநிலையில் தோழி கூற்றில் புலப்படும் அறம்

ரா. சிவராம்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630001.

முனைவர். வெ. திருவேணி,
நெறியாளர் & இணைப்பேராசிரியர்,
தொலைநிலைக் கல்வி இயக்ககம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630001.

ஆய்வுச்சுருக்கம்

அறம் பொருள் இன்பம் என முப்பொருள்களை உணர்த்துவனாகவே பல இலக்கண இலக்கிய நூல்கள் தோன்றின. இம் மூன்று பொருளையும் கூறும் இலக்கண நூல் எனில் அது தொல்காப்பியமே ஆகும். தொல்காப்பியம் தமிழில் முதல் இலக்கண நூலாகும் இதன் அடிப்படையிலேயே பல இலக்கண நூல்கள் தோன்றின. தொல்காப்பியம் அகத்திணை மரபுகளையே அதிகம் பேசுகிறது. எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களை தொல்காப்பியம் கொண்டிருப்பினும் பொருளதிகாரமே சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. தொல்காப்பிய அகத்திணை மரபுகளைக் கொண்டு சில இலக்கண நூல்கள் தோன்றின என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் மாந்தனது அகவாழ்வினைக் களவு, கற்பு என இரு நிலைகளாகக் கூறுகிறார். இவ்விரு நிலைகளிலும் தலைமக்களது வாழ்வினை எடுத்தியம்புவதோடு மட்டுமல்லாமல் நிலம் பொழுது மற்றும் மாந்தர்களின் கூற்று நிகழும் இடம் எவ்விடங்களில் எம்மாந்தர்கள் கூற்று நிகழ்த்த வேண்டும் என்ற வரைமுறைகளை வகுத்துள்ளார். அகம் என்பது ஆண், பெண் என இரு மாந்தர்களுக்கு இடையே தோன்றும் உள்ளத்தின் உணர்வே ஆகும். அகம் களவு, கற்பு என இரு கைக்கோள்களுக்குள் அடங்கும். இவற்றுள் தலைமக்களின் காதல் நிலையைப் பிறர் அறியாது இருவருக்கிடையே மட்டும் நிகழ்வது களவு எனப்படும். களவு நிலை காந்தர்வ மணத்தோடு ஒத்தது என நூலாசிரியர்கள் கூறுவர். அன்பின் ஐந்திணைகளுக்கு மட்டுமே களவுநிலை உரியது. இக்களவு நிலையில், தலைமக்களுக்கு இணையாகவும் இருவரின் களவு கற்பாக மாற, துணைபுரியும் மாந்தராக விளங்குபவள் தோழியாவாள். தோழி, தலைவிக்கு ஒரு அரணாகத் திகழ்ந்து தலைவிக்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்ப்பவளாகவும் அமைகிறாள். களவுநிலையில் தோழியின் கூற்று 32 இடங்களில் நிகழ்வதாகத் தொல்காப்பியர் கூறுகிறார். தலைவியிடம் தோன்றும் வேறுபாடுகளைக் குறிப்பால் உணரும் நிலை தலைமக்களின் புணர்ச்சிக்குப் பின் தோழி தலைவனிடம் அன்போடு நடந்துகொண்டு தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் வாயிலாக நின்று தலைவியின் குடும்பத்தில் தாய் மற்றும் செவிலி ஆகியோருக்குத் தலைவியின் மீது உண்டான ஐயத்தினைப் போக்கி, தலைமக்கள் இருவரையும் வரைதல்நிலை வரை கொண்டுசென்று தன் நெறியில் இருந்து சிறிதும் மாறாமல் தலைவின் நலனை மட்டுமே கண்ணெனக் கருதுபவள் தோழியாவாள். அக இலக்கியங்களில் தோழியின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். களவு மற்றும் கற்பு வாழ்க்கையில் தலைமக்களுக்கு வழிகாட்டியாக விளங்குபவள் தோழியே ஆவாள்.

கலைச்சொற்கள்: களவு, கற்பு, தொல்காப்பியம், தோழி, அகம், அறம், கூற்று.

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியமாகும். இது திணைக் கோட்பாட்டினை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட நூலாகும். இதனை அகத்திணைக் கோட்பாடு புறத்திணைக் கோட்பாடு என இருவகையாக பிறித்துக் கூறியுள்ளனர்.

தொல்காப்பியர் இருவகைக் கோட்பாடுகளை அகத்திணை கோட்பாடுகளையே அதிகமாக கையாண்டுள்ளார். அகத்திணையில் களவியல், கற்பியல் பொருளியல் மெய்ப்பாட்டியல் எனும் இயல்களில் அகக் கோட்பாட்டினை விளக்கி உள்ளார். கூற்று நிகழ்த்துபவர்கள் அக மாந்தர்கள் ஆவார்கள். இவ்வகமாந்தர்கள் இவ்விடங்களில் கூற்று நிகழ்த்த வேண்டும் இவ்விடங்களில் கூற்று நிகழ்த்தக் கூடாது என்பதையும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அவ்வகையில் களவு மற்றும் கற்பு ஆகிய இருநிலைகளிலும் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவளாக தோழி திகழ்கிறாள். களவு நிலையில் தோழி கூற்றின் வாயிலாக வெளிப்படும் அறம் பற்றிய செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

களவு நிலை

களவு என்பது தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையினைக் குறிக்கும். கற்பு வாழ்க்கையின் முந்தைய நிலை களவு எனப்படும்.
இதனை தொல்காப்பியர்,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணும் காலை (தொல்.பொருள்.89)

என்கிறார், களவு என்பது கைக்கிளை பிரிந்தது என்ற பெருந்திணை திணைகளுக்கும் உரியதென்று என தொல்காப்பியர் கூறுகிறார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையாகிய ஐந்திணையில் மறையோரிடத்து ஓதப்பட்ட எட்டு வகை மணங்களில் யாழினை உடையோர் புரியும் காந்தர்வ மணத்தோடு ஒன்றிவரும் தன்மையினை உடையது களவு என்கிறார் தொல்காப்பியர். அகப்பொருளில் நாற்கவிராச நம்பி களவு பற்றி கூறுகையில்

உளமலி காதல் களவெனப் படுவது
ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப (அகப்பொருள் விளக்கம். 117)
என்ற நூற்பாவின் மூலம் களவு எனப்படுவது நான்கு வேதங்களில் சொல்லப்படும் எட்டு வகை மணங்களில் காந்தருவ மனத்தோடு ஒப்பிடத்தக்கது எனக் கூறுகிறார்.
இறையனார் களவியல்
அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர். (இறையனார் அகப்பொருள். 01)

என, அன்பின் ஐந்திணையில் வரும் களவு மணத்தை காந்தரவு மணத்தோடு ஒப்பிடுகின்றது. தொல்காப்பிய நச்சினாக்கினியர் உரையில் தமிழரின் களவு மணம் என்பது கற்பில் முடியும், ஆனால் வடமொழியின் மணமாக கூறப்படும் காந்தர்வ மணத்தில் களவிற்குப் பின் கற்பு வாழ்க்கை நிகழாமல் போகலாம் எனக் கூறுகிறார்.

தோழி

அக இலக்கியங்களில் முதன்மை மாந்தராக தலைவன் தலைவி தோழி ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். தோழி என்பவள் செவிலியின் மகள் ஆவாள்.இதனை

தோழி தானே செவிலியது மகளே (தொல்.பொருள்.123)

என்கிறார் தொல்காப்பியர். தலைவன் தலைவி ஆகியோரின் களவு, கற்பு, வரைதல் ஆகிய எல்லா நிலைகளிலும் தலைவிக்கு பக்கபலமாகச் திகழ்ந்து ஓர் அரணாக விளங்குபவள் தோழியாவாள். தலைவனும் தலைவியும் பல்வேறு காரணங்களால் நேரில் சந்தித்து பேசிக்கொள்ள முடியாத நிலையில் இருவரையும் சந்திக்கச் செய்து அவர்களின் ஐயங்களை போக்குபவளாகவும் அமைகிறாள். தலைவியின் நலனை அவள் தாயை விட அதிகம் பேணுபவளாக தோழி திகழ்கிறாள். தலைவிக்குப் பல தோழிகள் இருப்பினும் செவிலியின் மகளே தலைவிக்குரிய தோழியாக இருக்கிறாள். இதனை இளம்பூரணர்,
பயின்றோ ரெல்லாருந் தோழியராகார் அருமறை கிளக்கப் படுதலான் உடன் முலை யுண்டு வளர்ந்த செவிலிமகளை தோழி எனப்படுவாள் (இளம்பூரணர், தொல்காப்பியம் பொருளதிகாரம், பக்.240)

என விளக்கம் அளிக்கிறார். தலைவியும் தோழியும் செவிலியிடம் ஒன்றாகப் பால் குடித்து உடன் பிறந்தவர்களைப் போல் வளர்ந்துள்ளனர். எனவே செவிலியின் மகளே தலைவியின் உற்ற தோழியாகக் கூறப்படுகிறாள்.

தோழியின் கூற்றானது களவியலில் தலைமாந்தர்களின் களவு வாழ்க்கையில் தொடங்கி வரைதல் நிலை வரை நிகழ்வதாகத் தொல்காப்பியர் கூறுகிறார். தலைவனிடம் காதல் கொண்ட தலைவி அதனை தோழியிடம் கூறாமல், தோழியர் கூட்டத்திலிருந்து சற்று விலகியே நிற்பாள், இத்தகைய மாற்றத்தினை உணர்ந்த தோழி அவளின் மாற்றத்திற்கான காரணத்தைக் கேட்டும் அவள் கூறாது மறுப்பு தெரிவித்துக் கொண்டே இருந்தால் இந்நிலையில் தலைவியின் களவொழுக்கத்தினை தோழி உணருவதாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்,
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்,
புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வரூஉம்,
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை,
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது.
பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானம் (தொல்.பொருள்.112 : 1-6)

என்ற அடிகளின் மூலம் தலைவியின் மீது எப்பொழுதும்வீசும் மணமின்றி வேறு மணம் வீசும் நிலையிலும் பருவத்தோற்றம் மாறி உடலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் தோழிகளோடு விளையாடாமல் பெரியவள் போல் செயல்களை செய்தல் சரியாக உணவு உண்ணாதிருத்தல், தோழிகளோடு நிற்காமல் தனியே நிற்றல் ஓடி விளையாடாமல் பூமித்தாய் நோகாமல் நடத்தல், செவிலியுடன் உறங்காமல் தனித்து உறங்குதல் போன்ற செயல்களை வைத்து, தலைவி காதல் வயப்பட்டதை தோழி உணரரும் வாயில்களாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

தலைமக்கள் களவொழுக்கத்தினை தலைவி வாயிலாக அறிந்து கொள்ள விரும்பும் தோழி மெய்யும் பொய்யும் கூறியும் தலைவியை வெட்கப்பட வைத்தும் பிறகு பயப்பட வைத்தும் தனது ஐயத்தினைக் கலைகிறாள் என்பதனை நாற்கவிராச நம்பியார்

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் சொல்லின் நாலுமென
முன்னுற உணர்தல் (அகப்பொருள் விளக்கம்.139 : 5-7)

என்ற அடிகளின் மூலம் உணர்த்துகிறார்.

தோழி

தலைவன் தலைவியின் களவொழுக்கத்தினை அறிந்த தோழி, தலைவியின் செயலால் ஏற்படும் தீங்குகளை நினைத்து ஐயம் கொள்கிறாள். தோழி இருவரின் களவு நிலையினை கற்பனையாக எண்ணுகிறார். இதன் பொருட்டு தலைவனிடம் தோழி கூற்றுக்களை நிகழ்த்துகிறாள். களவுநிலையில் தோழியே தலைவன் தலைவிக்கு இடையே வாயிலாக அமைகிறாள் தொல்காப்பியர் களவை கற்பாக்க முயலும் தோழியின் கூற்றுகளாக

எதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினும் உலகுரைத்து ஒழிப்பினும்,
அருமையின் அகற்சியும் அவள்அறிவுறுத்துப்
பின்வா என்றலும், பேதைமை யூட்டலும்,
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்,
அஞ்சிஅச் சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமொடு
எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும், (தொல்.பொருள்.112 : 7-13)

தோழி தலைவனிடம் ஒன்றும் அறியாத பேதை அவள் நீ அவளைச் சந்திக்க வருவது தலைவியின் குடும்பத்தினருக்குத் தெரிந்தால் ஏற்படும் அலர் மொழிகள் பற்றி தலைவி வருந்துகிறாள் எனவே முன்பு போல் முன்னுறு புணர்ச்சியைத் தொடராது விரைந்து உலகத்தார் போல் மணம் கொள்ளுமாறும் தலைவனிடம் தோழியின் கூற்று நிகழ்வதாக கூறப்பட்டுள்ளது. தோழி பல காரணங்களைக் கூறி தலைவியை சந்திக்க விடாமல் செய்ததன் நோக்கம் தலைவன் தன் காதல் மிகுதியால் தலைவியை மணம் முடிக்க வருவான் என்பதற்காக மட்டுமே அன்றி, தலைவன் தலைவியை பிரிக்கும் பொருட்டு அல்ல. இந்நிலையில் தலைமக்களுக்கு இடையேயான தோழியின் அறம் வெளிப்படுகின்றது.

களவு நீளும் நிலையில் தோழி அறம்

கிழவனை மாயம் செப்பிப்
பொறுத்த காரணம் குறித்த காலையும்,
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும்,
குறைந்தவட் படரினும் மறைந்தவள் அருகத்
தன்னொடும் அவளொடும் முன்னமுன் தளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்,
நன்னயம் பெற்றுளி நயம்புரி இடத்தினும்
எண்ணரும் பல்நகை கண்ணிய வகையினும்,
புணர்ச்சி வேண்டினும், வேண்டாப் பிரிவினும்,
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்,
புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்,
ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்,
செங்கடு மொழியால் சிதைவுடைத்து ஆயினும்,
பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ, (தொல்.பொருள்.112 :13-27)

தலைவன் தலைவியைச் சந்திக்க வரும் பொழுது எதிர்ப்பட்ட தோழியிடம் இங்கு யானை வந்ததா எனக் கேட்கிறான், அதற்கு ஒன்றும் பேசாத தோழி தலைவியிடம் செல்கிறாள். அங்கு வந்த தலைவன் இங்கு அம்பு பட்ட மான் வந்ததா என வினாவுகிறான் அதற்கு இங்கு புண்பட்ட குருதி ஒழுக களிறு வரவில்லை எனக் கூறி தலைவன் முன் கூறிய காரணத்தை எடுத்து இயம்புகிறாள். தலைவனின் இத்தகைய மாறுபட்ட பேச்சின் மூலம் தலைவன் தலைவியின் காதல் நிலையினை உணர்ந்து தோழி இருவரின் புணர்ச்சிக்குப்பின் தலைவனைத் தன் தோழியின் தலைவன் என்ற முறையில் அன்போடு பணிந்து நிற்கும் நிலையிலும் தலைவனைக் காண முடியாத தலைவியின் வேட்கை தணிக்கும் நிலையிலும் இருவரின் சந்திப்பு ஊரார்க்கு தெரிந்தால் அது அலராகி துன்பம் ஏற்படும் எனவும் இருவரும் புணர்ச்சி நிலையைக் கைவிட்டு வரைதல் வேண்டுதல் நிலையிலும் இயற்கைப் புணர்ச்சியின் பெருமைகளை கூறும் நிலையிலும் தலைவியை பாதுகாக்கும் பொருட்டு தலைவனிடம் வேண்டுதல் நிலையிலும் தலைவியைத் தோழி கடிந்து கூறும் நிலையிலும் அவனது பிரிவால் தலைவி வருந்தும்பொழுது அவளை தேற்றும் நிலையிலும் தலைவியின் கூற்று நிகழும் எனத் தொல்காப்பியர் கூறுகிறார்

இக்கூற்றின் மூலம் தலைவி மற்றும் தலைவனது களவு வாழ்வில் தோழியின் பங்களிப்பு என்பது அளப்பரியது எனவும் தலைவனைத் தலைவி காதல் கொள்கிறாள் என அறிந்ததும் தலைவன் மீது அன்பினைக் கொண்ட தன் தோழியாகிய தலைவியை பாதுகாப்புடன் பார்த்துக் கொள்ளுமாறும். நீங்கள் இருவரும் களவு நிலையிலேயே இருப்பீராயின் அது தலைவிக்கு இழிசொற்களை உண்டாகும், எனவே இருவரும் மனம் முடித்துக் கொள்ளுமாறும் தோழி கூறுவதன் மூலம் தோழி தலைவிக்கு எந்த ஒரு துன்பமும் நெருங்காமல் தலைவியின் அரணாக இருக்கிறாள் என்பதனை அறிய முடிகிறது இதன் மூலம் களவு நிலையில் தோழியின் அறம் வெளிப்படுகிறது.

வரைவு நிலையில் தோழியின் கூற்று ;

தலைமக்கள் இருவரும் களவொழுக்கத்திலே இருப்பாராயின் அது ஊரார்க்குத் தெரிந்தால் அலர் ஏற்பட்டு இழிவு ஏற்படும் என ஐயம் கொள்ளும் தோழி தலைமக்கள் இருவருக்கும் மணம்முடித்து வைக்க வேண்டும் என்ற நிலையில், தோழியின் கூற்றுகளாக தொல்காப்பியர் கூறுவன,

அடுத்த வன்புறைக் கண்ணும்,
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்,
காப்பின் கடுமை கையற வரினும், (தொல்.பொருள்.112 : 28-30)

தலைவனை விரைந்து மனம் செய்து கொள்ள வற்புறுத்திக் கூறுகிறாள் இந்நிலையில்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்

*நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் இறப்ப*
*நோக்கி,*
*அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ,*
*அனைநில வகையான் வரைதல் வேண்டினும்,*
*ஐயச் செய்கை தாய்க்குஎதிர் மறுத்துப்*
*பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்,*
*அவள்விலங் குறினும் களம்பெறக் காட்டினும்,*
*பிறன்வரைவு ஆயினும், அவன்வரைவு மறுப்பினும்*
*முன்னிலை அறன்எனப் படுதல்என்று இருவகைப்*
*புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்,*
*வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்,*
*ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்பட (தொல்.பொருள்.112 : 30-44)*

*தலைவன் வருமிடத்தில் உள்ள பாதையின் தன்மை மற்றும் காவலின் கடுமையைத் தலைவியிடம் கூறும் நிலையிலும் தலைவனிடம் ஊரின் நிலை, குடி, பிறப்பு ஆகியவற்றினை எடுத்துக் கூறுதல் நிலையிலும் தாய் மற்றும் செவிலிக்கு தலைவியின் மீது ஏற்பட்ட ஐயத்தினை தீர்க்கும் நிலையிலும், பிறர் தலைவியை மணம் பேசி வந்த போது அதனை மறுக்கும் நிலையிலும், தலைவியின் தமர் வரைவுக்கு உடன்பட்டும் தலைவன் பொருளீட்டல் காரணமாக மறுக்கும் நிலையில் அவனை கடுஞ்சொற்களைக் கூறி விரைந்து மணம் முடிக்கும்படிக் கூறும் நிலையிலும் தோழியின் கூற்று நிகழ்வாதாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.*

*இக்கூற்றின் மூலம் தலைவியின் நலத்தினை மட்டுமே தோழி கண்ணெனக் கொண்டுள்ளமை புலப்படுகிறது. தலைவியைத் தேற்றும் விதமாகத் தலைவன் வர முடியாத நிலையினை எடுத்துக் கூறி தலைவியின் குடும்பத்தினர்கள் தலைவியின் மீது கொண்ட ஐயத்தினைப் போக்கி, தலைவனை விரைந்து மணம் செய்துகொள்ள வற்புறுத்திக் கூறுகிறாள். இந்நிலையில் தலைவியின் உள்ளத்துணர்ச்சியை உணர்ந்த தோழி அவள் கவலை அடையும் வகையில் ஏதும் நிகழாமல் இருக்க பல நிலைகளில் தலைவிக்குப் பக்கபலமாக நின்று தனது அறத்தினை வெளிப்படுத்துகிறாள்*

*முடிவுரை*

*தோழி என்பவள் களவு வாழ்க்கையில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே வாயிலாக அமைகிறாள் தோழி தலைவியின் காதலை உணர்ந்த பிறகு எந்த ஒரு நிலையிலும் தலைவியை விட்டு விலகாமல் தலை மாந்தர்கள் இருவரையும் களவு நிலையில் இருந்து கற்பு நிலைக்குக் கொண்டு செல்லவே முறப்படுகிறாள், தோழி தலைவிக்கு எந்த ஒரு இழுக்கும் ஏற்படாத வண்ணம் தலைவியின் மீது அவளின் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட ஐயத்தினை கலைத்து தலைவியின் களவு நெறியினைக் காத்துள்ளாள்.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********